# நரகம்

# 3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# நரகம்

~ ~ ~ ~ ~

**(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, '<u>நரகம்</u>' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)**

~ ~ ~ ~ ~

246. நான் உயிர்த்தெழுவதை தடைசெய்ய நரகத்தில் எந்த பிசாசும் கிடையாது. அந்த காலையில், நான் உள்ளே நுழையாதபடிக்கு அவன் அடைக்கக்கூடிய கதவு எதுவுமில்லை. முத்திரைகள் உடைக்கப்பட்டுவிட்டன. அல்லேலுயா! நான் விடுதலையானேன்.

நான் ஒரு கழுகு. நான் கூட்டில் அடைபட்டு கிடக்கவில்லை. நான் விடுதலையானேன். நான் மரித்தோரிலிருந்து எழுந்து, இயேசுகிறிஸ்துவின் புதிய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறேன். நான் மட்டுமல்ல, பரிசுத்த ஆவியினால் நிறைந்து இங்கு அமர்ந்துள்ள ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும், பையனும், பெண்ணும், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கின்றனர். நீ ஒரு கழுகு.

**65-04-10 ஈஸ்டர் முத்திரை**

-----------

51. இப்பொழுது... விஷமுள்ள சிலந்தி கொண்ட 'சூப்'பை குடித்தால் அது உங்களை வியாதிப்படுத்திவிடுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் மருத்துவமனைக்குச் சென்று உங்கள் வயிற்றைக் கழுவ வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். உங்களுக்கு அதிக

தொல்லைகள் உண்டாகும். அது உங்கள் உயிரையும் கூட போக்கிவிடும். ஆனால், என்னை நீங்கள்... நீங்கள் அப்படிப்பட்ட இடத்திற்கு ஒருக்காலும் செல்லமாட்டீர்கள். நீங்கள் மறுபடியுமாக கதவை அடைத்து அந்த இடத்தை இருளாக்கமாட்டீர்கள். ஏனெனில் உங்களுக்கு விஷமேறி நீங்கள் இறந்துவிடுவீர்கள் என்னும் பயம் உங்களுக்கு இருக்கும். அப்படியிருக்க, நீங்கள் ஒரு ஸ்தாபனத்தை சேர்ந்து கொண்டு, ''அது உங்கள் சரீரத்தை அல்ல, உங்கள் ஆத்துமாவை நரகத்தில் அழிக்கவல்லது'' என்று வேதம் கூறியுள்ளதை நீங்கள் ஆதரித்து அதற்காக போராடுகின்றீர்கள். பாருங்கள்? ஜனங்கள் எவ்வளவு விசித்திரமாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் தாங்கள் செல்லும் நித்திய ஸ்தலத்தை ஏதோ ஒரு வேத சாஸ்திரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கின்றனர். நீங்கள் அவர்களிடம் வேதாகமத்தைக் கொண்டு வந்து, ''இதோ

பாருங்கள், வேதாகமம் இவ்வாறு இங்கு உரைக்கிறது'' என்று கூறினால்,

வேத பண்டிதன் அதை பார்த்துவிட்டு, “அது வேறொரு காலத்துக்குரியது'' என்கிறார். பாருங்கள்? நீங்களும் அதற்கு செவி கொடுக்கிறீர்கள். தேவன் என்ன கூறுகிறார் என்பதைதான் நீங்கள் காணவேண்டும். உண்மையான கிறிஸ்தவன் எவனும் வார்த்தைக்கு மாத்திரமே செவி கொடுக்கிறான், அவ்வளவுதான். தேவனுடைய மனிதன் அந்த அப்பத்தினாலே பிழைக்கிறான்.

**64-12-27 இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?**

---------------

340. **ஆயிரம் வருட அரசாட்சி என்பது ஆயிரம் வருடங்களாக இருக்குமா? அது ஒரு சந்ததியின் காலமாக இருக்கக் கூடாதா?**

149. இல்லை! வேதத்தில் ஒரு சந்ததிக்கு நியமிக்கப்பட்ட காலம் நாற்பது

ஆண்டுகளே. ஆனால் வேதமோ, "அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" என்று உரைக்கிறது (வெளி.20:4). அது பூமியில் ஆயிரம் வருட காலமாக இருக்கும், ஏனெனில் பூமியில் நாம் கணக்கிடும் ஆயிரம். வருடம் தேவனுடைய கணக்கில் ஒரு நாள் மட்டுமே. பூமியில் ஆயிரம் வருடம் தேவனுக்கு ஒரே நாள், அவருடைய கணக்கின்படி . இதை எத்தனை பேர் புரிந்து கொண்டீர்கள்?

150. எனவே அது ஓய்வு நாள், அப்பொழுது சபை பாவத் துக்கு எதிராக பாடுபடாது. சாத்தான் சிறிது காலத்திற்கு, ஆயிரம் வருடங்களுக்கு கட்டப்பட்டிருப்பான், ஏனெனில் அவனுடைய பிரஜைகள் அனைவரும் அப்பொழுது நரகத்தில் இருப்பார்கள், அவனுடைய ... பூமியிலுள்ள சபை மீட்கப்பட்டு கிறிஸ்துவின் சமூ கத்தில் இருக்கும், எனவே அவனுக்கு கிரியை

செய்ய ஒன்றும் இருக்காது. எனவே, நான் ஏற்கனவே கூறினபடி, அது ஒரு சங்கிலியாக இருக்காது, ஒரு நீண்ட சங்கிலியாக. அது சூழ்நிலை என்னும் சங்கிலி. அவனால் ஒன்றும் செய்ய முடியாது. அவன் உதவியற்றவனாகவும், நம்பிக்கையற்றவனாகவும், அவனுடைய பிரஜைகள் உயிரோடெழ காத்துக் கொண்டிருப்பான்; அப்பொழுது அவர்கள் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளுமாக பிரிக்கப்படு கின்றனர்.

**64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #19**

-------------

402. **சகோ. பிரான்ஹாமே, ஒரு நபர் உண்மையான நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் அனுபவத்தைப் பெற்றிருந்த போதிலும், அவர் வார்த்தையின் வெளிச்சத்தைப் புறக்கணிப்பாரானால், அவர் இழக்கப்பட்டு நரகத்தில் முடிவடைவது சாத்தியமா?**

90. ஆம், ஐயா! அது முற்றிலும் உண்மை .

## 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #20

---------------

141 நீங்கள் ஒரு சபையின் ஒரு அங்கத்தினராயிருந்தால், அது ஒரு நல்லக் காரியம்தான், ஆனால் அது போதுமானதல்ல. பாருங்கள், அந்த ஐஸ்வரியமான வாலிப, அதிபதி சபையின் ஒரு அங்கத்தினனாயிருந்தான். புரிகிறதா? அவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள தான் என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவினிடத்தில் கேட்டான். அவன் அதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அவன் நடந்து சென்று விட்டான். அந்த வாலிபன் என்ன ஒரு முட்டாள்தனமான காரியத்தை செய்தான். அவனுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள். அவன் அடையாளங்கண்டு கொள்ளப்பட்ட

கடைசி நேரம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? கொஞ்சங்கழித்து அவன் செழித்தான். அவன் ஐஸ்வரியவானான். அவனுடைய களஞ்சியங்கள் நிரம்பி வழிந்தோடுமளவிற்கு அவன் ஒரு நிலையினை அடைந்தான். ஆனால் அதன்பின்னர் நாம் அவனுடைய கடைசி அடையாளத்தை நரகத்தில், அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுவதில் கண்டடைகிறோம். அது உங்களுக்கு சம்பவிக்க அனுமதிக்காதீர்கள், வேண்டாம். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுங்கள்.

142 வாலிப ஜனங்களாகிய நீங்கள், வாலிபப் பெண்களாகிய நீங்கள், வாழ்க்கையின் திருப்பத்திலே தயவு செய்து அதைச் செய்யுங்கள். உங்களுடைய சகோதரரான, உங்களை நேசிக்கிற ஒருவனாகிய எனக்கு செவிகொடுங்கள். நான் உங்களை

நேசிக்கிறபடியால் நான் இங்கே இருக்கிறேன். நான் தேவனை நேசிக்கிறேன், நான் உங்களையும் நேசிக்கிறேன், நான் உங்களை நேசிக்கவில்லையென்றால், என்னால் தேவனை நேசிக்க முடியாது.

## 64-03-22 சோதனைக்குப் பிறகு சத்துருவின் வாசலை சுதந்தரித்துக்கொள்ளுதல்

----------------

139. சகோதரியே, ஒரு நிமிடம் ஒன்றை உன்னிடம் கூற விரும்புகிறேன். நீ ஒருக்கால் பழைமை நாகரீகமுடையவளாய் இருக்கலாம். ஆனால் இந்த செக்ஸ் ராணிகளிடம் இல்லாத ஒன்று உன்னிடம் உள்ளது. அவள் பெற்றுக் கொள்ளமுடியாத ஒன்றை நீ பெற்றிருக்கிறாய். நீ உடை உடுத்துவதில் பழமை நாகரீகமுடையவளாய் இருக்கலாம். ஆனால் நீ கனமுள்ள சீமாட்டியைப் போல் உடை

உடுத்தியிருக்கிறாய். அவர்கள், ''அந்த உருளும் பரிசுத்த வாட்டியையப்பார்'' என்று உன்னைப் பார்த்து ஏளனம் செய்யலாம். கவலைப்படாதே. முழு உலகமே அந்த செக்ஸ் ராணியைப் பார்த்தாலும், இந்த உருளும் பரிசுத்தவாட்டி பெற்றுள்ள ஒன்றை அவள் பெற்றிருக்கவில்லை. அவள் அதை ஒருக்காலும் பெறமுடியாது. அவள் நித்திய காலமாக இழக்கப்பட்டவள். அவள் விமோசனமற்றவள். பாருங்கள்?

உங்களுக்கு ஒழுக்கம் உண்டு, உங்களுக்கு நற்குணம் உண்டு. அவளிடத்தில் ஒன்றுமில்லை. இழக்கப்பட்ட ஆத்துமாக்களை நரகத்தில் சிக்க வைக்கும் கண்ணி மாத்திரமே அவளிடம் உள்ளது. குருடர் அதற்குள் நடந்து செல்கின்றனர். உங்களிடம் ஒன்றுண்டு.

140. உங்கள் பெயர்கள் ஸ்தாபன புத்தகத்திலும் கூட இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்கள் நீதியுள்ள வாழ்க்கையே தேவனுடைய கோபாக்கினை பூமியின் மேல் இன்று விழாதபடி நிறுத்தி வருகிறது. உலகம் அதை நம்பாது. உருளும் பரிசுத்தவாட்டிகள் என்று அழைக்கப்படும் ஸ்திரீகளே, தேசத்தின் பாவங்களுக்காக இரவும் பகலும் தேவனிடம் கதறி அழுவதைத் தவிர வேறொன்றையும் அறியாத சிறிய மனிதர்களே, நீங்கள் தான் தேவனுடைய கோபாக்கினையை நிறுத்தி வைத்திருக்கலாம், ''நான் பத்து பேரைக் கண்டால், அதை அழிக்கமாட்டேன். பத்து பேரைக் கண்டால்.

“சோதோமின் நாட்களில் நடந்தது போலவே நடக்கும்''. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? ''நான் பத்து மெதோடிஸ்டுகளைக் கண்டால், நான் பத்து பாப்டிஸ்டுகளைக் கண்டால், நான் பத்து

பெந்தெகொஸ்தேயினரைக் கண்டால், நான் பத்து விளையாட்டு வீரர்களைக் கண்டால், நான் பத்து செனட் உறுப்பினர்களை (Senators) கண்டால்'' என்றல்ல; ஆனால் ''நான் பத்து நீதிமான்களைக் கண்டால்!''

ஒரேயொரு நீதிமான் தான் உண்டு, அது கிறிஸ்து. கிறிஸ்து ஜீவியம் செய்தல், அவர்களுள் அந்த பத்து ஒருவர் - ''நான் அழிக்கமாட்டேன்''.

**63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

--------------

250. அந்த ஐசுவரியவானின் வாழ்க்கை, அவன் கேட்ட சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்திருந்ததாக உங்களால் கூற முடியுமா? அவன் விசுவாசியாயிருந்த போதிலும், அறிவாளி களின் மத்தியிலும், கேளிக்கைகளின் மத்தியிலும் அவன் வாழ்ந்த அந்த வாழ்க்கையை நீங்கள்

அவ்வாறு கூறமுடியுமா? அன்றிரவு சூரியன் மறைந்த பிறகு, அவன் விருந்து பண்ணினான். போதகர் ஒருவர் ஜெபம் செய்து அதை ஆரம்பித்து வைத்திருப்பார். அங்கு கேளிக்கை இருந்தது. அப்பொழுது ஒரு தரித்திரன் அவனுடைய வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் விருந்து பண்ணி, அவன் தேவன் பேரில் கெண்டிருந்த விசுவாசத்தைக் குறித்து பேசினான். ஆனால் அடுத்த நாள் விடியும் முன்பு - சூரியன் உதயமாகும் முன்பு - அவன் நரகத்தில் இருந்தான். அது உண்மை . அது தான் உங்கள் அறிவாளிகள்.

## 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

---------------

246. ஐசுவரியவான் சாக்குபோக்கு சொன்னான். அவனால் இயேசு கூறினதைச் செய்ய முடியவில்லை. உலகத்தில்

அவனுக்கிருந்த அநேக நணபர்களால் அவன் கீழே இழுக்கப்பட்டான். அவர் களுடன் கொண்டிருந்த தொடர்பை அவன் விட்டுவிட விரும்ப வில்லை .

இன்றைக்கும் அநேகருக்குள்ள பிரச்சினை இதுவே. நீங்கள் ஒரு விடுதியைச் சேர்ந்திருப்பதால், அவர்களுடைய சகோதரத்து வத்தை விட்டு விட உங்களால் முடியவில்லை. அவர்கள் மது அருந்துதல் போன்ற அநேக செயல்களைப் புரிகின்றனர். நல்லது, அப்படியே சென்று கொண்டிருங்கள். விடுதிக்கு விரோதமாக, அந்த ஸ்தாபன சபைக்கு விரோதமாக எனக்கு ஒன்றுமில்லை. நான் உங்களைக் குறித்து பேசுகிறேன், பாருங்கள்? அதற்கு விரோதமாக இல்லை. ஒன்றின் ஆறு, மற்றொன்றின் அரை டஜன். ஸ்தாபன சபைகள் தேவனுடைய வார்த்தையை மறுதலிப்பதால், அவை விடுதிகளேயன்றி

வேறொன்றுமில்லை என்று இப்பொழுது நான் உங்களிடம் கூறினேன்.

247. கவனியுங்கள், ஐசுவரியவானுக்கு சாக்கு போக்குகள் இருந்தன. ஆயினும் அவன் தமது சாட்சியை புறக்கணிக்கவில்லை. அவன் பெரிய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான் என்று நாம் காண்கிறோம். அவனுக்கு புத்தி இருந்தது, அவன் அதிகமாக விருத்தியடைந்து, முடிவில் அவனுடைய பொருட்களைச் சேமித்து வைக்க புதிய களஞ்சியங்களை கட்ட வேண்டிய நிலைமை அவனுக்கு உண்டானது. அவன் மரித்த போது ..... கழுத்து பட்டை யை திருப்பி உடுக்கும் பட்டதாரி போதகர் ஒருவர் அவனுடைய சவ அடக்கத்தின் போது பிரசங்கித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவர் ஒருக்கால் இப்படி கூறியிருக்கலாம்.... அவர்கள் கொடியை அரை கம்பத்தில் பறக்க விட்டு, "இந்த நகரின் நகராண்மைத் தலைவராக

பணியாற்றிய எங்கள் அருமை சகோதரன் இப்பொழுது சர்வல்லமையுள்ள தேவனுடைய கரங்களை அடைந்து விட்டார். ஏனெனில் அவர் சபையின் ஒரு சிறந்த அங்கத்தினராக விளங்கினார். அவர் இன்னின்னவைகளைச் செய்தார்'' என்று கூறியிருப்பார்கள்.

ஆனால் வேதமோ, அவன் நரகத்தில் வேதனை அனுபவித்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான்'' என்கின்றது.

248. அவன் நரகத்திலும் தான் விசுவாசித்ததை கடைபிடிக்க விரும்பினான். அவன் லாசருவை ஆபிரகாமின் மடியில் கண்ட போது, 'என் தகப்பனாகிய ஆபிரகாமே, லாசருவை அனுப்பும்'' என்றான். அப்பொழுதும் ஆபிரகாமை அவனுடைய தகப்பன் என்றழைத்தான். பாருங்கள்?

அவன் அறிவைப் பெற்றிருந்து, புத்திகூர்மையுள்ள சபைக்கு சென்றான்.

வெளிச்சம் அவன் மேல் பட்டபோது, அவன் அதை புறக்கணித்தான்.

அதுவே இன்றைய நவீன சபையின் போக்காயிராவிட்டால், அது வேறென்னவென்று எனக்குத் தெரியவில்லை. தேவன் பாதையில் எதை பிரகாசிக்கச் செய்த போதிலும் - அக்கினி ஸ்தம்பத்தையோ அல்லது வேறெதையோ - அவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு அதற்கு விளக்கம் தந்து அதை நிராகரித்து, அவர்கள் சமுதாயத்தில் கொண்டுள்ள உயர்ந்த நிலைக்கேற்ப அறிவாளிகளின் கூட்டத்தில் சேர்ந்து கொள்கின்றனர்.

**63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?**

-------------

74. மேலும் இந்த வாலிபனைப் பாருங்கள், அதன்பிறகு, ஒருக்கால்... அவன் ஒருக்கால் விவாகம் கூட பண்ணியிருக்க மாட்டான்.

ஆனபோதிலும, அவன் ஒரு மகத்தான தலைவனாயிருந்தான். மேலும் அவன்... மேல் உட்கார்ந்திருந்தான்.

75. இன்றும் எருசலேமில் இன்னும் கூட அவர்கள் வீட்டின் மேலிருந்து (housetop) புசிக்கிறார்கள், இந்நாளிலும் சாயங்கால நேரத்தில் வெளியில் குளிர்ச்சியாயிருக்கும் போது, அவ்வாறு செய்கிறார்கள்.

மேலும் அவனோடு வேறொரு கதாபாத்திரம் நம் மனக்கண் முன்பாக கொண்டு வரப்படுகிறதைக் காண்கிறோம்: அவன்தான் ஒரு பிச்சைக்காரன். (லூக்கா 16: 19-31)

76. அடுத்திருப்பவனைக் கனம்பண்ண வேண்டுமென்று (கற்பிக்கப்பட்டு) அவன் வளர்க்கப்பட்டிருந்தான், பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டுமென்றிருப்பதை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். பாருங்கள்,

கிறிஸ்துவின் அந்த அழைப்பை அவன் புறக்கணித்ததன் மூலமாக, இறுதியில்... அதைப் போன்று காணப்பட்ட அவ்விதமான ஒரு வீட்டில் வளர்க்கப்பட்டிருந்த ஒரு வாலிபனுடைய, பிறரைக் கனம் பண்ணுகிற குணமானது அவனை விட்டு ஒருபோதும் அகன்று போயிருக்காது. ஆனால் அது அவனை விட்டுப் போய் விட்டது. அது போய் விட்டது.

77. லாசரு என்ற பெயருடைய ஒரு மனிதன் வாசலருகே படுத்திருந்து, அவனிடம் உணவுக்காகப் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான், (ஆனால்) அதனால் பயனில்லாமல் போயிற்று. பெருக்கி போடப்பட்ட துணிக்கைகளை அவன் புசித்துக் கொண்டிருந்தான், அது அந்தப் பிச்சைக்காரனுக்குப் போடப்படுவதல்ல, ஆனால் நாய்களுக்கு போடப்படுவதைத் தான் அவன் புசித்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய் இருந்தான். ஆனால் அந்த

மனிதனோ (ஐசுவரியவான்) சமுதாயத்தில் மிகவும் மெருகேற்றப்பட்டு பளபளப்பாயிருந்தான், ஆகையால் அவனுக்கு அதற்கு மேலும் எந்த பரிதாபமும் இல்லாதிருந்தது. அவன் உணர்வற்று விறைத்துப் போனவனாயிருந்தான், ஏனென்றால் கிறிஸ்து கொடுத்த அந்த உரிமை சலுகையை அவன் புறக்கணித்திருந்தான்.

78. ஒருக்கால் ஒரு சாயங்கால நேரத்தில், அருமையான ஒயின் மதுபானங்களோடு தன்னுடைய மது விருந்தை (toast) அனுபவித்துக் கொண்டிருந்திருப்பான், விலையுயர்ந்த அணிகலன்களை அணிந்திருந்த அழகான பெண்களும், அதைப் போன்ற காரியங்களும் அவனைச் சூழ இருந்தனர், அவனுடைய இருதயம் வாஞ்சித்த எல்லாவற்றைக் கொண்டும் மதுவிருந்து நடந்து கொண்டிருந்தது. அந்த

பிச்சைக்காரனோ வாசலருகே படுத்துக் கொண்டிருந்தான்.

79. அடுத்த நாள் காலையில், விடியற்காலம் வருவதற்கு முன்பே, அவன் நரகத்தில் இருந்தான், லாசரு வந்து தன்னுடைய நாவில் தண்ணீர் தர வேண்டும் என்று கதறி சத்தமிட்டுக் கொண்டிருந்தான். காட்சியோ மாறி விட்டது.

80. அவன், 'தகப்பனாகிய ஆபிரகாமே' என்று கூறுவதைக் கவனியுங்கள், இப்பொழுது, ஆபிரகாம் யூதர்களின் தகப்பன் என்பது அவனுக்கு அப்பொழுதும் ஞாபகம் இருந்தது. அவன், 'தகப்பனாகிய ஆபிரகாமே, அந்த பிச்சைக்காரனாகிய லாசருவின் விரல்களில் கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு வந்து, என் நாவில் வைக்கும்படி அவனை அனுப்பும். இந்த அக்கினி ஜூவாலை வேதனையாயுள்ளது' என்றான்.

81. மேலும் அவன் கூறினான்... ஆபிரகாமோ, 'இது, என்னால் அதைச் செய்ய முடியாது' என்று அநேக வார்த்தைகளில் கூறினான். 'இவை எல்லாவற்றையும் தவிர, உன்னுடைய ஜீவியத்தில் உனக்கு தருணமிருந்தது என்பதை பார்.'

82. அவனுக்கு எப்போது அந்த தருணம் இருந்தது? இயேசு, 'என்னைப் பின்பற்றிவா' என்று கூறினபோது. ஆனால் அவன் அதைப் புறக்கணித்து விட்டான். அவன் பணம் சம்பாதிக்கக்கூடிய வழியில் போய் விட்டான். அது சரிதான், பணம் சம்பாதிப்பதில் தவறொன்றுமில்லை, ஆனால் நீங்கள் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் போதே இயேசுவைப் பின்பற்றுங்கள். புரிகிறதா? அவனோ ஜனக்கூட்டத்தினரோடு வேறொரு வழியில் போய் விட்டான்.

83. அவன் கூறினான், ஆபிரகாம், ‘அதுவுமல்லாமல், எந்த மனிதனும் ஒருபோதும் கடந்து வரக்கூடாதபடிக்கு உனக்கும் அவனுக்குமிடையே ஒரு பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது, எந்த மனிதனும் ஒருபோதும் கடந்து வரவே மாட்டான். அங்கேயிருக்கிறவர்கள் இங்கே வர முடியாது, இங்கிருக்கிறவர்கள் அங்கேயும் போக முடியாது. அந்த பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது. எந்த மனிதனும் கடந்து வந்ததில்லை, அல்லது கடந்து வரப்போவதுமில்லை’ என்று கூறினதை நீங்கள் கண்டுகொள்ளுகிறீர்கள்.

84. அதன்பிறகு அவனைக் கவனியுங்கள். அவன் அப்போது ஒரு சுவிசேஷகனாக இருக்க விரும்பினான். அவன் ஒரு வாலிபனாயிருக்கையில், இயேசு தம்மைப் பின்பற்றும்படி அவனுக்கு கொடுத்திருந்த அழைப்பு, ஒரு ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்று அவன் கொண்டிருந்த அழைப்பு

அவனிடம் மீண்டும் திரும்பியது. அவன் அதை நினைவுகூர்ந்தான், அவனுக்கு ஐந்து சகோதரர்கள் மீண்டும் பூமியில் இருந்தார்கள், அவர்கள் அந்த இடத்தில் போக அவன் விரும்பவில்லை.

85. அவன், ‘அப்படியானால், என்னுடைய சகோதரர்களும் இந்த வழியில் வரக்கூடாது என்று கூறும்படி லாசருவைத் திரும்ப அனுப்பும்’ என்றான். வேறு வார்த்தைகளில் கூறினால், ‘‘என்னைப் பின்பற்றிவா’ என்ற அழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி.’ பாருங்கள்?

ஆனால் ஆபிரகாமோ, ‘அவர்கள், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்’ என்றான்.

86. அவன், ‘ஆமாம், லாசருவைப் போல மரித்தோரிலிருந்து ஒருவன் உயிர்த்தெழுந்து திரும்பிச் சென்று

அவர்களிடம் கூறினால், ஏற்றுக் கொள்வார்கள்' என்றான்.

87. நீங்கள் பாருங்கள், நாம் மரித்த பிறகும், அப்பொழுதும் நீங்கள் சுயநினைவுடையவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அது காட்டுகிறது. அவன் அதை நினைவுகூர்ந்தான். ஆபிரகாமோ, 'மகனே, உன்னுடைய நாட்களில் நடந்ததை ஞாபகம் கொள்' என்றான். புரிகிறதா? உங்களுக்கு அப்பொழுதும் ஞாபகம் இருக்கும். நீங்கள் உங்கள் நினைவை இழந்து போவதில்லை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

88. மனிதன் கொண்டிருக்கக்கூடிய ஞாபகங்கள் அப்பொழுதும் அதேவிதமாக இருக்கும், 'என்னைப் பின்பற்றி வா' என்று இயேசு கூறினதை அவன் கேட்டிருந்த அத்தருணத்தை அவன் நினைவுகூர்ந்தான். ஆனால் அவனோ தவறான ஆளைப் பின்பற்றிப் போனான், தவறான

கூட்டத்தைப் பின்பற்றினான். அவன் தவறான கூட்டத்தில் சேர்ந்து கொண்டு, தவறான இடத்திற்குப் போய், தவறான நித்தியத்தில் முடிந்து போனான்; அந்நாளில் அவன் தேவனிடமிருந்து என்றென்றுமாக நிர்மூலமாக்கப்படுவான்.

89. மேலும் இயேசு குறிப்பிடத்தக்க மகத்தான ஒரு வார்த்தையைக் கூறினார், 'மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும், அவர்கள் நம்ப மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணம் உண்டு, அவர்கள் அதற்கு செவி கொடுக்காவிட்டால், ஒருவன் மரித்தோரிலிருந்து எழுந்து போனாலும் செவி கொடுக்க மாட்டார்கள். அவர்கள் நம்ப மாட்டார்கள்' என்றார்.

**63-06-01 என்னைப் பின்பற்றி வா**

\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-

154. ஒரு சமயம் நான் இந்தப் பையன் பாப்டிஸ்ட் சபையில் ஞாயிறு

பாடசாலையிலே போதித்தான். ஒரு இரவு நான் அங்கே பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். நான் அவனை கீழ்ப்பட்டணத்தில் சந்தித்தேன். நான் என் இரு சக்கர மிதிவண்டியில் போய்க் கொண்டிருந்தேன். நான் கீழ்ப்பட்டணத்தில் அவனை சந்தித்தேன். அவனும் ஒரு இரு சக்கர மிதிவண்டியில் இருந்தான். அவன் ஒரு ஓரமாய் போய் நின்றான். அவன், "பில்லி அன்றொரு இரவு நீர் பேசுவதை கேட்கும்படி நான் வந்தேன்" என்றான். தொடர்ந்து, "அந்த ஸ்திரீ அழ ஆரம்பிக்கும் வரைக்கும், எல்லா ஜனங்களும் 'ஆமென்' என்று சொல்லும் வரைக்கும், நீர் கூறிக்கொண்டிருந்ததை நான் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன்" என்றான். ஆனால் என்னால் அதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை " என்றான். புரிகின்றதா? அவன், "நீர் சரியாக ஏதோ ஒன்றை கூறிக்கொண்டிருக்கும்போது 'ஆமென்'

என்று ஜனங்கள் கூறுவதை கேட்பது அது என்னுடைய முதுகில் நடுக்கங்கொள்ளச் செய்தது'' என்றான்.

155. நான், “சகோதரனே அது அந்த விதமாய் என்னை பாதிப்ப தில்லையே'' என்றேன். நான், "அவன் கூறினதை கூறினேன். நான், “நான் உனக்குச் சொல்லுவேன்” என்றேன். நான், “அவர்கள் ஆமென் " என்ற கூறும் அந்த சிறிய சத்தம் மற்றும் அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களில் உமக்கு விசுவாசம் இல்லையா?" என்றேன். "இல்லை. நான் அதை விசுவாசிக்கிறதில்லை” என்றான்.

156. நான், "நீர் எப்பொழுதாவது பரலோகத்திற்குச் செல்ல நேர்ந்தால் நீர் விரைத்துப் போவீர்" என்றேன். நான், "ஏனென்றால், அவர்கள் அது உங்கள் முதுகில் ஒரு நடுக்கத்தை ஓடச் செய்ததானால் அங்கே தேவனுக்கு முன்பாக நின்று கொண்டிருக்கும் தூதர்கள்

இரவும் பகலுமாய், "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று சத்தமிடும் போது அது உங்களுக்கு என்னவாக இருக்கப்போகிறதோ"? என்றேன். ஏன், நீங்கள் எப்பொழுதுமே ஜீவிக்கும் மிக அமைதியான உலகமாய் இது இருக்கும்". அது உண்மை .

157. நரகத்தில் அழுகையும், பற்கடிப்பும் இருக்கப்போகின்றது. பரலோகத்திலோ ஆரவாரமும், சத்தமிடுதலும் இருக்கப் போகின்றது. எனவே நீங்கள் - நீங்கள் எப்போதும் இருக்கப்போகும் அமைதியான இடத்தில் நீங்கள் சரியாக இப்பொழுது இருக்கிறீர்கள். ஆகையினால் ஒரு இடத்தில் அல்லது மற்ற ஒன்றில் நீங்கள் அதில் இருக்கும்படி பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். எனவே தேவனுடைய வார்த்தைக்குப் பின்னாக இருப்பதையே

நான் என்னுடைய தெரிந்து கொள்ளுதலாக எடுத்துக்கொள்ள விரும்புவேன். நீங்கள் அவ்வாறு செய்ய மாட்டீர்களா? [சபையோர் "ஆமென்" என்கிறார்கள். - ஆசி.) அதன் பேரிலேயே தொடர்ந்து போய்க்கொண்டேயிருங்கள். "அது கர்த்தர் உரைக்கிறதாவதாக இருக்கிறது. கர்த்தர் உரைக்கிறதாவது." தொடர்ந்து போய்க் கொண்டே இருங்கள். சரி.

## 62-05-31 தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள போராட்டம்

-----------------

69. இந்த ஐசுவரியமான இளம் மனிதன் தன்னைத் தானே கிறிஸ்துவுக்கென அளிக்க விரும்பவில்லை, ஆகவே அவன் புறப்பட்டுச் சென்று விட்டான். பிறகு நாம் பார்ப்பது என்னவென்றால் அவன் தானே..... அவன் மிகவுமாக செழித் தோங்கினான், அவனுடைய

களஞ்சியங்கள் மிகவுமாக நிரம்பி வழிந்து, “ஆத்துமாவே உன் இளைப்பாறுதலுக்குச் செல்” என்று அவன் கூறும்படிக்கு ஆயிற்று. ஓ அவன் எல்லாவற்றிலும் செழித்தோங்கினான். அவனுக்கு மிகவுமாக இருந்தபடியால் அவனுக்கு தேவை என்பதே இல்லாதிருந்தது.

70. ஆனால் ஏதோ ஒன்று நடந்தது. அடுத்த முறை நாம் அவனைக் காண்கையில் அவன் நரகத்தில் தன்னுடைய கண்களை ஏறெடுத்துப் பார்த்து அங்கே தூரத்திலே ஆபிரகாமின் மடியிலே அமர்ந்திருந்த அந்த தரித்திரனைக் காண்கின்றான். ஏன் அவ்வாறு ஆனது என்றால் அவன் எல்லாவற்றையும் விட்டு விட்டு கர்த்தராகிய இயேசுவை பின்பற்ற அவனுக்கு விருப்பமில்லாதிருந்தது.

**62-01-23 எல்லாவற்றையும் விட்டுவிடுதல்**

--------------

246. இங்கே அண்மையில் நான் அந்தவிதமான ஒரு காரியத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் அங்கு பின்னால் நின்றுகொண்டிருந்த ஓர் வாலிபப் பெண்மணியினிடத்தில் பேசினேன். ஒரு ஊழியக்காரரின் மகளாயிருந்த அவளோ பயங்கரமாக உற்றுப் பார்த்து முறைத்தாள். அவள் என்னை சபைக்கு வெளியே சந்தித்தாள், அவள் என்னை கடுமையாக வீசியெறிந்து பேசாதிருந்திருந்தால் நலமாயிருந்திருக்குமே! ஆனால் அவளோ , நீர் அறிவற்றவராயிருக்கிறீரே" என்றாள். சிறு பெண், திமிரான அவமதிப்புப் பண்புடையவளாய், உதட்டுச் சாயமும் பூசிக் கொண்டிருந்தாள்; மேலும் குட்டையாகத் தலைமுடியை வெட்டிக் கொண்டவளாயுமிருந்தாள். அப்பொழுது அவள், "அதைக் குறித்து என்னிடத்தில் பேச எனக்கு யாராவது வேண்டுமென்றால், அப்பொழுது நான்

கொஞ்சம் அறிவுத்திறனுள்ள யாரையாவது பயன்படுத்துவேன்" என்றாள். அதன்பின்னர் மீண்டும், அது போன்ற ஒரு காரியத்தைப் பிரசங்கிக்க என்னுடைய தகப்பனாரின் பிரசங்கபீடத்திற்கு நீர் ஒருபோதும் வரவே வேண்டாம்" என்று கூறினாள்.

247. அவபொழுது நான், "உன்னுடையத் தந்தை, ஒரு நல்ல நேர்மையான பாப்டிஸ்டு பிரசங்கியாராக இருந்தாலும், அவர் அதற்கு எதிராக பிரசங்கிக்கமாட்டார் என்ற எண்ணங்கொண்டே நீ என்னிடத்தில் சொல்லுகிறாயா?" என்று கேட்டேன்.

அதற்கு அவளோ, "அவர் உன்னை இங்கு வரும்படிக்கு கூலிக்கு அமர்த்தவில்லையே...." என்று கூறினாள்.

அப்பொழுது நானோ, "அவர் என்னைக் கூலிக்கு அமர்த்தவேயில்லைதான். ஆனால் நானோ

அழைப்பின் மூலமே வந்தேன்” என்று கூறினேன்.

அவளோ மறுபடியும், “நான் உம்மை ஒருபோதும் அதற்காக மன்னிக்கவே மாட்டேன்” என்றாள்.

248. அப்பொழுது நான், "அது உன்னைப் பொறுத்ததாயிருக்கிறது. நான் சுவிசேஷத்தை மாத்திரமே பின்பற்றினேன்” என்று கூறினேன். அங்கே வீசின மெல்லிய காற்றில் ரோஜா மலர்களின் புதர் செடிகளோ அசைந்தாடிக் கொண்டிருந்தன. அழகான வாலிபப் பெண்.

249. கொஞ்சங்கழித்து, ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்து, நான் அந்தப் பட்டிணத்தினூடாகக் கடந்து சென்றேன். அப்பொழுது நான் அந்த அதே வாலிபப் பெண்மணி தன்னுடைய அரைப்பாவாடையானது கீழே தொங்கிக்கொண்டிருக்க, ஒரு சிகெரேட்டைப் புகைத்துக்கொண்டு

வீதியில் சென்று கொண்டிருப்பதைக் கண்டேன். நான், "அது சகோதரன் இன்னார் - இன்னாருடைய மனைவி இல்லை மகளாயிற்றே" என்று யோசித்துப் பார்த்தேன். அப்பொழுது என்னால் அவளை அடையாளங்கண்டுபிடிக்க முடியுமா என்று பார்க்க நானும் அந்த வீதியில் நடந்து சென்றேன்.

250. அப்பொழுது அவள் என்னை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, இந்த சிகெரெட்டை புகைத்து, அதன் புகையை மூக்கினூடாக ஊதினாள். பின்னர் அவள், “ஹலோ, பிரசங்கியாரே'' என்று தேவபக்தியற்ற கொச்சையான வார்த்தைகளைக்கூறி அவ்விதமாய்க் கூப்பிட்டாள்.

அதற்கு நானோ, “நலம், நலமே!” என்றேன்.

உடனே அவள், “என்னுடைய சிகெரேட்டு கட்டிலிருந்து ஒரு சிகெரட்டை

எடுத்துக்கொள். ஆண்மை ஆற்றலோடு செயல்படும் ஒருவராயிரும்" என்று கூறினாள்.

அதற்கு நானோ, “நீ உன்னைக் குறித்தே வெட்கப்படவில்லையா?” என்று கேட்டேன்.

251. அப்பொழுது அவளோ தன்னுடைய சட்டைப் பையில் வைத்திருந்த சிகெரெட்டு அட்டைப் பெட்டியை கைவிட்டு எடுத்து, "உனக்கு வேண்டுமானால் ஒரு சிகெரெட்டை எடுத்துப் புகை” என்று கூறினாள்.

252. அதற்கு நானோ, "உனக்கு அவமானம். தேவனுடைய ஊழிக்காரனுக்கு ஒரு சிகெரெட்டு கொடுப்பதென்பது உனக்கு அவமானமே” என்று கூறினேன்.

பின்னும் அவள், “உனக்கு வேண்டுமானால் என்னுடைய

புட்டியிலிருந்து சற்று மது அருந்து” என்றாள்.

அதற்கு நான், “தயவு செய்து அதைக் கூறாதே” என்றேன்.

253. அவள் என்னையே உற்றுப்பார்த்தாள். என்னால் அழுவதை அடக்க முடியவில்லை, ஏனென்றால் அவளுடையத் தந்தை ஒரு நல்ல மனிதனாயிருக்கிறார். நான் அவளை நோக்கிப் பார்த்தேன். நானோ, “ஓ, என்னே! அவளுக்கு ஏராளமான நேரம் இருப்பதாக எண்ணிக்கொண்டாளே” என்று நினைத்தேன்.

254. அதன்பின்னர் நான் நடக்கத் துவங்கினேன். என்னுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிவதை என்னால் நிறுத்த முடியவில்லை. நான் தொடர்ந்து நடந்தேன். அப்பொழுதும் அவள், “ஒரு நிமிடம் நில்லுங்கள்” என்றாள்.

அதற்கு நானோ, “சொல், என்ன அம்மணி?" என்று கேட்டேன்.

255. அவள் பின்னால் நடந்து வந்தாள். ஜனங்கள் கடந்து சென்றுகொண்டிருந்த அந்த வீதியில் அவளிடத்தில் பேசுவது ஏறக்குறைய ஒரு அவமானமாயிருந்தது. அவள் நடந்து அருகில் வந்தாள். பின்னர் அவள், “அன்றிரவு நீர் என்னிடத்தில் என்னக் கூறினீர் என்பது உமக்குத் தெரியுமா?” என்று கேட்டாள்.

அதற்கு நானோ, “எனக்கு எப்பொழுதுமே நினைவிருக்கும்” என்றேன்.

256. அப்பொழுது அவள், “பிரசங்கியாரே, நீர் சரியாகக் கூறியிருந்தீர் என்றே நான் உமக்குக் கூற விரும்புகிறேன்'' என்றாள். மேலும் அவள், “நான் அப்பொழுது கடைசி முறையாக பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினேன்” என்றுக் கூறினாள். இப்பொழுது அந்த

ஸ்திரீ என்னிடத்தில் கூறின குறிப்பிடத்தக்க குற்றம் இதுதான். நான் அதை உயிரோடிருக்கும் வரை மறக்கவே மாட்டேன். அவள், "அவர் அன்றிரவு என்னோடு ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆனால்" என்று கூறி, “நான் அவரை அந்த நேரத்தில் புறக்கணித்தபோது, அதுவே என்னுடையக் கடைசி நேரமாயிருந்தது” என்றாள். அவள் தொடர்ந்து, "அது முதற்கொண்டே என்னுடைய இருதயம் மிகவும் கட்டினமாயிருந்து கொண்டு வருகிறது; நான் தேவனுக்காகவோ, சபைக்காகவோ அல்லது மற்றெந்த காரியத்திற்காகவோ கவலைப்படுகிறதே இல்லை. நான் என்னுடைய தந்தையினிடத்தில் ஒவ்வொரு நாளும் முரட்டாட்டம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்” என்று கூறினாள். மேலும் அவள், “என் தாயினுடைய ஆத்துமா ஒரு பணியாரத்தைப் போன்று நரகத்தில்

வறுத்தெடுக்கப்படுவதையும், அது நகைக்கப்படுவதையும் என்னால் காண முடிகிறது'' என்றும் கூறினாள். அதுவே கடைசி முறையாக பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தினதாகும். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

257. நாம் ஒரு புறாவின் சிறகுகளில் பரலோக வீட்டிற்குச் செல்வோமாக. நாம் மணவாட்டியாயிருப்போமாக. நீங்கள் தவறாயிருந்தால், இப்பொழுதே உங்களுடைய இருக்கையிலிருந்து எழும்புங்கள். இங்கே மேலே வாருங்கள். இங்கே பீடத்தண்டை நின்று, "நான் தவறாயிருந்து வந்துள்ளேன், சகோதரன் பிரான்ஹாம், நான் எரிச்சலான மனநிலையுடையவனாய் இருந்து வந்திருக்கிறேன். இல்லையென்றால் நான் - நான் - நான் தேவபக்தியற்றவனாய் வாழ்ந்து வந்திருக்கிறேன். நான் - நான் செய்யக் கூடாத இந்தக் காரியங்களை நான் செய்கிறேன். சகோதரன் பிரான்ஹாம், நான்

இதை, அதை அல்லது மற்றதைச் செய்திருக்கிறேன். நான் பொய்யுரைத்தலில் குற்றவாளியாய் இருக்கிறேன். நான் திருடுகிறதில் குற்றவாளியாயிருக்கிறேன். நான் வேறேதோ ஒரு காரியத்தில் குற்றவாளியாயிருக்கிறேன். நான் சேவிக்க வேண்டியவிதமாக தேவனை சேவித்திருக்கவில்லை. நான் என்னைக் குறித்தே வெட்கப்படுகிறேன். நான் என் ஜீவியத்தை சரிப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். எனவே சகோதரன் பிரான்ஹாம், நீர் இன்றிரவு இங்கே எனக்காக ஜெபிக்கமாட்டீரா?" என்று கூறுங்கள். நான் அதைச் செய்ய சந்தோஷப்படுவேன்.

## 62-01-21E ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

\- - - - - - - - - - - - -

90. தேசத்தின் முடிவை அறிவிக்க தேவன் ஒரு மனிதனை, தாழ்மையுள்ள ஒரு மனிதனை, ஒரு தீர்க்கதரிசியை அடையாளமாக உபயோகித்தார். தேவனே, வேறொருவரை 'எங்களுக்கு அனுப்பும்; வேறொருவரை எங்களுக்கு எழுப்பும் தேவனுடைய ஜனங்கள் இவ்வாறு ஜெபம் செய்வார்களானால், அவர் அவனை எழுப்புவார். ஜனங்களுக்கு அந்த பாரம் - உண்டாக வேண்டும். அவர்கள் விழித்தெழும்ப வேண்டும். அவர்கள் உணர வேண்டும். நாம் வாழும் காலம் என்ன வென்றும், நம்மைச் சுற்றிலும் உள்ள நிலை என்னவென்றும் அவர்கள் அறிந்து கொண்டு விழித்தெழும்ப வேண்டும். நீங்கள் எப்பொழுதும் போலவே வாழ்ந்து, நான் அடுத்த ஆண்டு புது வீடு கட்ட வேண்டும். ஜோன்ஸ் குடும்பத்தினர் வைத்துள்ளதைக் காட்டிலும் ஒரு நல்ல காரை வாங்க வேண்டும். நான் இதை

செய்ய வேண்டும்...' என்று கூறுவீர் களானால் . ஓ , இப்படியாக நீங்கள் சிந்தித்துக் கொண்டி ருந்தால் .... அது நல்லது தான். ஆனால் சகோதரனே. இவை யனைத்தும் அழிந்து போகும் என்பதை நீ உணர வேண்டும். இயேசு, "சரீரத்தை அழிக்க வல்லவருக்கு பயப்படாதிருங்கள் (ருஷியாவின் அணுகுண்டுக்கு)... இந்த சரீரத்தை சில நிமிடங் களுக்குள் புழுதியாக மாற்ற வல்லவருக்கு பயப்படாதிருங்கள். ஆனால் அந்த விதமாக உங்கள் சரீரத்தை மாற்றி, உங்கள் ஆத்துமாவை நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப் படுங்கள்" என்றார் (மத். 10 : 28). அது தான்.

## 61-11-12 கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்

---------------

56 டென்னணியில் ஒரு இரவு, ஒரு பெரிய பாப்டிஸ்டு சபையில் பிரசங்கம்

செய்துவிட்டு வெளியே வந்தபோது, கதவண்டை நான் சந்தித்த அந்த வாலிபப் பெண்ணை நினைவு கூருகிறேன். அன்றிரவு நடந்த கூட்டத்தில், அவள் கிறிஸ்துவினிடம் வரும்படி அழைக்க நான் ஏவப்பட்டேன். அப்பொழுது அவள் பரிகாசமாக என் முகத்தை நோக்கி சிரித்தாள். அவள் அந்த சபையின் மூப்பர்கள் ஒருவரின் மகள். அன்றிரவு அவள் கதவருகே நின்று கொண்டு எனக்காக காத்திருந்தாள். நான் வெளியே வந்தபோது, அவள் என்னிடம், ''நீர் இப்பொழுதே இதை அறிய விரும்புகிறேன். மறுபடியும் என்னை அப்படிப்பட்ட தர்மசங்கடமான நிலையில் ஆழ்த்தவேண்டாம்.' என்றாள்.

நான், “தேவன் உன்னை அழைத்தார்” என்றேன்.

அவள், ''மூடத்தனம்! நான் வாலிபமாயிருக்கிறேன். அதற்கு இன்னும்

நிறைய நாட்கள் உண்டு. எங்கள் வீட்டிலுள்ள அனைவருக்கும் போதிய மார்க்கம் எங்கள் தந்தையிடம் உள்ளது', என்றாள்.

''சகோதரியே, உனக்கு அது போதாது. ஒவ்வொருவரும் தனித்தனியே தங்கள் சொந்த மார்க்கத்தை கொண்டிருத்தல் அவசியம் என்றேன்.

அவள், "யாராகிலும் அதைக் குறித்து என்னிடம் பேச வேண்டுமானால், அறிஞர் ஒருவரைக் கொண்டு வருவேன். உம்மைப் போன்ற ஒருவரையல்ல'' என்றாள்.

நான், ''போ, உனக்கு விருப்பமான அனைத்தையும் சொல். அதனால் எனக்கு ஒரு பாதகமுமில்லை. ஆனால் ஒரு நாள் அதற்காக நீ வருந்த நேரிடும்"என்றேன்.

57 சிறிது காலம் கழித்து, அந்த பட்டினத்தின் வழியாய் நான் செல்ல நேர்ந்தது. அவள், உட்பாவாடை கீழே தொங்கிக் கொண்டு, கையில் ஒரு

சிகரெட்டுடன் நடந்து வந்து, எனக்கு விஸ்கி வேண்டுமா என்று கேட்டாள். அது தான்! இதுவே அவளுடைய சாட்சி. அவள், 'அன்றிரவு கிறிஸ்துவினிடம் வரும்படி என்னை நீங்கள் அழைத்தது ஞாபகமுள்ளதா? அது முற்றிலும் உண்மை . அன்றிரவு தேவனுடைய ஆவியானவர் என்னுடன் போராடி, நான் அவரிடம் வரும்படி எவ்வளவோ வற்புறுத்தினார். அன்று முதல் என் தாயின் ஆத்துமா நரகத்தில் அப்பத்தைப் போல் எண்ணெயில் பொறிக்கப்பட்டு, அதை பார்த்து சிரிப்பதை என்னால் காணமுடிகிறது'' என்றாள். அதுதான் நடந்தது, பாருங்கள்.

நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். சகோதரனே, அதை நீ செய்யவேண்டும். நீ செய்ய வேண்டும். அவ்வளவுதான். யேசபேல் அவமதித்தாள்.

**61-10-15E மரியாதைகள்**

---------------

80. உங்களில் சிலருக்கு ராக் அண்டு ரோல் பாடகர்களுக்கிருப்பது போல, தாலந்துகள் உள்ளன. அது எனக்கு குமட்டல் உண்டாக்குகிறது - ஆவிக்குரிய குமட்டல். இதை கூற விரும்புகிறேன். ராக் அண்டு ரோல் பாடகர்கள் சனிக்கிழமை இரவு முழுவதும் ராக் அண்டு ரோல் பாடல்களைப் பாடி நடனமாடி விட்டு, அடுத்த நாள் காலையில் சபையோருக்கு முன்பாக பக்தியுள்ளவர்கள் போன்ற முகங்கொண்டவர்களாய், ஏதோ ஒரு கிறிஸ்தவ பாடலைப் பாடி விட்டு, அவர்கள் பரலோகத்துக்கு செல்லப் போவதாக எண்ணியுள்ளனர். நான் அநேக பெயர்களைக் குறிப்பிடலாம். ஆனால் அதை செய்ய வேண்டிய அவசியமில்லை, இந்த ஒலி நாடா எல்லாவிடங்களுக்கும் செல்கின்றது. உங்கள் எல்லோருக்கும் தெரியும். அண்மையில் ஹாலிவுட்டிலுள்ள ஒரு பையன், அவன் ''மார்க்கம்“ அதற்கு

எதிராயுள்ளது என்னும் காரணத்தால் ஒரு பெண்ணை முத்தமிட மறுத்துவிட்டான். அது அவனுடைய மார்க்கத்துக்கு விரோதம் என்பதற்காக. ஆனால் அதே சமயத்தில் அவன் அவமானமாய் தோன்றும் ராக் அண்டு ரோல் திரைப் படங்களை எடுக்கிறான். யூதாஸே, உன் முப்பது வெள்ளிக் காசுகளைக் கொண்டு சென்று, தேவனுடைய கிருபைக்கு பாத்திரவானாகிவிடலாமென்று நினைக்கிறாயா? அது நரகத்தில் உனக்கு ஒரு இடத்தை வாங்கித் தருமேயன்றி வேறொன்றும் செய்யாது.

## 61-08-27 கிருபையின் செய்தி

-------------

150. வேதம் இங்கே இவ்வாறு கூறுகிறது. '... ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை "

151. முதல் மரணமானது நமக்குப் பிரியமானவர்களிடமிருந்து நம்மை பிரிக்கக் கூடியதாக இருக்கிறது. நாம் மரித்தாலும், தேவ னுடைய சமூகத்திற்குள் செல்லுவோம். அவருடைய பிரசன் னத்தை விட்டு அகலமாட்டோம். இரண்டாம் மரணம் என்ற ஒன்று இருக்குமானால், அது நிச்சயமாக ஆத்துமாவின் மரணமாகத்தான் இருக்க வேண்டும். உலகத்தை ஜெயங்கொள்ளுகிறவன் அல்லது உலகத்துக்குரிய காரியங்களை ஜெயிக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருப்பான்; இரண்டாம் மரணமானது அவனைத் தொடுவதில்லை. நித்திய ஜீவன் என்பது அதுதான். “சுகபோகமாக வாழ்கிற ஸ்திரீ உயிரோடு செத்தவள்'' என்று வேதம் கூறுகிறது. அது சரிதானே? ''பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'' சாவதென்றால் என்ன? “முழுவதுமாக பிரிக்கப்படுதல்''. “இனி

இல்லாதிருத்தல்'', பாருங்கள்? ''முழுவதும் அறுப்புண்டு போகுதல்''. இனிமேல் இல்லை என்றுள்ள கட்டம் எப்பொழுது ஏற்படும்? அது எவ்வாறு இங்கு ஏற்பட்டதோ, அதே நடை முறையில் தான் அது, இனி ஒன்றுமே இல்லை என்கிற நேரம் வரைக்கிலும் போகும். அது எதிலிருந்து உண்டாக்கப்பட்டதோ அங்கே அது திரும்பிச் செல்லுகிறது.

**60-12-06 சிமிர்னா சபையின் காலம்**

\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-

96. தேவனுடைய குமாரன் ஒரு இருதயத்தின் மேல் பிரகாசிக்கும் பொழுது நித்திய ஜீவனானது ஜீவியத்திற்கு வருகிறது.

97. "நானே வழியும், சத்தியமும், ஒளியுமாயிருக்கிறேன்". நாம் வந்தாக வேண்டியதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன.

98. நான்காவது என்னவென்றால் எந்தக் காரியத்தையும் அதன் மேல் வைத்துக்கட்ட இயேசு மட்டுமே பாதுகாவலான, அசையாத அஸ்திபாரமாயிருக்கிறார். அது உண்மை . அது மேலே வைத்துக் கட்டக்கூடிய அஸ்திபாரமாய் மட்டுமே இருக்கிறது. மற்றெல்லா அஸ்திபாரங்களும் சொறி மணல்களாயிருக்கின்றன.

நான் கிறிஸ்து என்றும் உறுதியான கன்மலையின் மேல் நிற்கிறேன். மற்றெல்லா நிலங்களும் சொறி மணல்களாய் உள்ளன.

99. அதிகமான ஜனங்கள் ஐசுவரியத்தின் மேல் கட்டுகிறார்கள். அவர்கள் வேலை செய்ய முயற்சித்து, அவர்களால் எவ்வளவு பணத்தை சம்பாதிக்க முடியும் என்று பார்க்கிறார்கள். அவர்கள், "நான் அதை செலவழிக்க முடியவில்லையென்றாலும், எனக்குப்

பின்னால் என்னுடைய பிள்ளைகள் செலவழிப்பார்கள்" என்கின்றனர். அது என்ன செய்கிறது? அது அடிமைத்தனத்திற்கு திருப்பி வழி நடத்துகிறது. நீங்கள் உங்கள் பணத்திற்கு ஒரு அடிமையாகி விடுகிறீர்கள். அநேகர் அப்படி இல்லாமல் இருக்கலாம். ஒருக்கால் ....... நீங்கள் அந்த விதமான ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டியதில்லை. நீங்கள் வெறுமனே பணத்தை இச்சிக்க முடியும், அப்பொழுது நீங்கள் ஒரு கோடீஸ்வரனைப் போன்று குற்றவாளியாய் இருக்கிறீர்கள். புரிகின்றதா? நரகத்தில் அங்கே கோடீஸ்வரர்கள் இருப்பதுபோன்று, அங்கே பிச்சைக்காரர்களும் இருப்பார்கள். ஏனென்றால் அது தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிறதான அதன் பேரிலுள்ள உங்கள் மனப்பான்மையாய் இருக்கிறது. இப்பொழுது நீங்கள் அதை

ஐசுவரியங்களின் மேல் கட்டினால் அது விழுந்துபோகும்.

## 60-06-04 யாரிடத்தில் போவோம்?

-------------

246. இங்குள்ள மனிதர். கர்த்தாவே, ஓ தேவனே . இவர்கள் மேல் இரக்கமாயிரும். இவர்களில் அநேகர் இன்னும் உலகத்தின் காரியங்களில் நடந்து கொண்டு, உலகத்தின் காரியங்களை வாஞ்சித்து அனுபவித்து. பாவத்தில் உழன்று, புகை பிடித்து, குடித்து, சமுதாய மது அருந்தி, அந்த பக்கத்தில் சிறிது பீர் குடித்து, அப்படி ஏதாவதொன்றைச் செய்து இச்சித்து, அவலட்சணமாக உடுத்தியுள்ள அரை நிர்வாணப் பெண்களின் படங்களைத் தொங்க விட்டுள்ளனர். தெருக்களில் போகும் (கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும்) இந்த பெண்களை இவர்கள் இச்சையோடு பார்த்து, மற்றவர்கள் மேல் ஏறக்குறைய காரை

மோதும் நிலைக்கும் கூட வந்து விடுகின்றனர். அந்த பெண்ணின் உடல் இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் கல்லறைக்குள் அழுகி, அழகான உருவம் கொண்ட அந்த உடலின் வழியாக பூச்சிகளும் கிருமிகளும் நெளிய வாய்ப்புண்டு என்றும், அவள் வாழ்ந்த வாழ்க்கையின் நிமித்தம் அவளுடைய ஆத்துமா பிசாசின் நரகத்தில் இருக்க வாய்ப்புண்டு என்றும் அறியாமலிருக்கிறாள். இருப்பினும் அவள் வர்ணம் தீட்டப்பட்ட தன் உதடுகளை அசைத்து உங்களை பார்த்து கேலி செய்கிறாள்.

247. தேவனே, இந்த ஜனங்களின் மேல் இரக்கமாயிரும். ஓ கர்த்தாவே, அவர்கள் இழந்து போக விடாதேயும். தயவு செய்து இரக்கமாயிருந்து இரக்கத்தை அனுப்புவீராக. கர்த்தாவே, அவர்கள் ஒவ்வொருவருக்கும் அதை அளியும். நீர் ஒருவர் மாத்திரமே இந்த ஆசீர்வாதத்தை

அருள முடியும். நீர் அவர்களை நித்திய ஜீவனுக்கென்று அழைத்திருந்தால், அவர்களுடைய இருதயங்கள் திறக்கப்படுவதாக. அவர்கள் இக்காலையில் எல்லாவற்றையும் தள்ளி விட்டு, அதை ஏற்றுக் கொள்ளட்டும். பிதாவே, இதை அருளும்.

## 60-02-21 தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை அடையாளம் கண்டு கொண்டு அதன்படி நடத்தல்

---------------

174 நான் அங்கே எழும்பி நின்று, நான், “நல்லது, நான்நான் நான் இதைக்குறித்து அறியேன்” என்றேன். உங்களுக்குத் தெரியுமா? உண்மையாகவே பயத்துடன், நான் வார்த்தையில் தடுமாறிக்கொண்டிருந்தேன் நான் இங்கே லூக்கா 16-ம் அதிகாரத்தை எடுத்து, நான் நினைத்தேன், "நல்லது இப்பொழுது.." நான் நான் பேசும் பொருளை எடுத்து,

அவன் பாதாளத்தில் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து கதறினான்." நான் எனவே உங்களுக்கு தெரியுமா, நான் அதை பிரசங்கிக்கத் தொடங்கினேன். நான் பிரசங்கிக்கையில் சற்று மேலான உணர்வையடைந்தேன். நான், “ஐசுவரியான் பாதாளத்திலிருந்து கூக்குரலிட்டான்” என்றேன். அந்த மூன்று சிறிய வார்த்தைகள். அதைப்போன்ற அனேக செய்திகள் என்னிடம் உண்டு. உதாரணமாக, "இதை நீ விசுவாசிக்கிறாயா?" "கன்மலையைப் பார்த்துப் பேசு" போன்றவை. எனவே நான் அவைகளை பிரசங்கிக்க நீங்கள் கேட்டிருக்கிறீர்களே. நான், "அப்பொழுது அவன் அழுதான்" என்பதை எடுத்து வைத்திருந்தேன். நான், "அங்கே பிள்ளைகளே கிடையாது. நிச்சயமாக நரகத்தில் கிடையாது. அப்பொழுது அவன் கதறினான்" என்றேன். மேலும் நான், "அங்கே பூக்கள் ஏதும் இல்லை.

அப்பொழுது அவன் கதறினான். அங்கே தேவன் இல்லை. அப்பொழுது அவன் கதறினான். அங்கே கிறிஸ்து இல்லை. அப்பொழுது அவன் சத்தமிட்டான்" என்றேன். பின்னர் நான் சத்தமிட்டான். ஏதோ காரியம் என்னை பற்றிக் கொண்டது. என்னே, ஓ! என்னே! பிறகு என்ன சம்பவித்தது என்று எனக்கு தெரியாது. பின்னர் நான் என் சுயநினைவுக்கு வந்தபோது நான் வெளிப்பக்கமாக நின்று கொண்டிருந்தேன். அந்த ஜனங்கள் அலறிக்கொண்டும், சத்தமிட்டுக்கொண்டும், அழுதுகொண்டும் இருந்தனர். நான், நாங்கள் ஒரு பயங்கரமான நேரத்தை உடையவர்களாக இருந்தோம்.

**59-04-19A என் சுய சரிதை**

---------------

72. நாம் காணக்கூடாத காரியங்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நீங்கள், "சரி, நான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனாக ஆவதற்கு இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? என் முதலாளி என்ன கூறுவார்?". என்கிறீர்கள். நீ அப்படியாக செய்யாவிட்டால் உங்கள் கர்த்தர் என்ன சொல்லுவார் என்று நினைத்துப் பாருங்கள். யார் மகத்தானவர்? உன் முதலாளியா? அடுத்த வாரமே நீங்கள் அவரை கல்லறையில் அடக்கம் செய்யக்கூடும். இந்த நேரத்திலே அவர் மரித்துப் போயிருப்பார், ஆனால் உங்கள் இயேசுவோ என்றென்றும் உயிரோடிருப்பார். நீங்கள் நரகத்தில் இருந்து பிசாசினால் கடும் சித்திரவதைக்குட்பட்டு . ... (°) ..... உங்களைச் சுற்றிலும் தீய ஆவிகள் சூழ்ந்து கொண்டு உங்களை ஓயாமல் வட்டமிட்டுக் கொண்டு, நீங்கள் தேவனிடமிருந்து என்றென்றுமாக பிரிக்கப்பட்டு, எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமல் இருப்பதை சற்று நினைத்துப் பாருங்கள் - அதை குறித்து

என்ன? நாளைக் காலை சூரியன் உதிப்பதற்கு முன்னர் ஒருக்கால் நீங்கள் அந்த இடத்தில் இருக்கலாம். நண்பனே, நீ தயாராக இருப்பது நன்று. இதை ஒரு தமாஷாக, ஜோக்காக எடுத்துக் கொள்ள வேண்டாம். இதை ஒரு தொலைக்காட்சி நடிப்பைப் போன்று எடுத்துக் கொள்ள வேண்டாம். நினைவில் கொள், இது ஒருக்காலும் அழியாத தேவனுடைய நித்திய வார்த்தையாகிய சுவிசேஷமாகும்.

73. இன்றிரவு நான் இங்கே தெருவில் வந்து கொண்டிருந்த போது ஒரு விபத்தில் நசுங்கிப்போயிருந்த ஒரு வாலிப மனிதன் தெருவிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டதை நான் கண்டேன். அவன் ஓட்டி வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வேறொரு காரின் மீது மோதினது. அவனிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடினது. அவசர ஊர்தியில் அவனை எடுத்து கிடத்திக் கொண்டிருந்தனர். அந்தப் பையன் வாய்ப் பிளந்தவனாக அங்கே கிடந்தான்,

அவனுடைய கண்களிலிருந்தும் காதுகளிலிருந்தும் இரத்தம் வெளிவந்துக் கொண்டிருந்தது. அவனின் மீது ஒரு போர்வையைப் போர்த்தி அவன் முகத்தை மூடி அவசர ஊர்தியில் தூக்கிப் போட்டனர். நான் அங்கே நின்று "ஓ தேவனே, அந்த பையன் என் கூட்டத்தில் பங்கெடுத்திருப்பானா? நான் அதிக நேரமாக வற்புறுத்தினேனா? அவன் இயேசுவை அறிந்திருந்தானா? எல்லாம் இப்பொழுது முடிந்து விட்டதே'' என்று நினைத்தேன்.

74. நண்பனே, அந்த தருணத்தை இப்பொழுது நான் அளிக்கின்றேன். இந்த பூமிக்குரிய காரியங்களைக் குறித்து நினைக்காதே, நாளைய தினத்தைக் குறித்து சிந்திக்காதே; நாளைய தினமானது அதற்குரியதைப் பார்த்துக் கொள்ளும். இயேசு இப்பொழுது அருகாமையில் இருக்கும் போது, இன்று குறித்து இப்பொழுது நாம் சிந்திப்போமாக.

எல்லாக் காரியங்களையும் நம்மால் காணக்கூடாமல் இருக்கலாம். ஆனால் மனிதனுடைய பாவத்தை எடுக்கத்தக்கதாகவும், மனிதர் நம்முடைய பிதாவாகிய தேவனிடமாக ஒப்புரவாகத் தக்கதாக மனிதனுடைய சாயலிலே உண்டாக்கப்பட்ட இயேசுவை நாம் காண்கிறோம். நான் ஜெபிப்பதற்கு முன்னதாக ஜெபிக்கப்பட விரும்பி தங்கள் கரங்களை உயர்த்த விரும்புகிறவர்கள் இவ்வளவு பேர்கள் தானா? ஐயா, இங்கே உள்ளவரே, ஐயா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சக்கர நாற்காலியில் இருக்கும் நீங்கள், ஐயா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் கொண்டிருக்கும் இந்த அணுகுமுறைக்காக தேவன் இன்றிரவு உங்கள் ஜெபத்தை நிச்சயமாகக் கேட்பார். ஐயா, அது நிச்சயம் என்றே நான் கூறுகிறேன்.

**59-04-10 காணக்கூடாததை நோக்கி பார்த்தல்**

---------------

171. நாம் யாவரும் தேவனிடத்தில் ஏதோ ஒன்றிற்கு கடன்பட்டுள்ளோம். நாம் நம்முடைய ஜீவியங்களை அவரிடத்தில் கடனாகப் பெற்றுள்ளோம். நாம் அதைக் குறித்து உண்மையாய் இருப்போமாக. வெளியே நடந்து ......... "நல்லது, இப்பொழுது பாருங்கள், நான்நான் பிரஸ்பிடேரியன், நான் மெத்தோடிஸ்டு, நான் பெந்தேகோஸ்தே. நான் தேவனுடைய சபை, நான் நசரேயன், நான் யாத்திரீக பரிசுத்தர்'' என்று கூறாதீர்கள். அந்தவிதமாய் எண்ணிக்கொள்ளா தீர்கள். அவைகளில் கோடிக்கணக்கானவர்கள் நரகத்தில் இருப்பார்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு கிறிஸ்தவனாய் இருங்கள்.

**59-03-01M வாசல் இடுக்கமாய் உள்ளது**

---------------

96. செய்தி நிருபர்கள் என்னிடம், ''சகோ. பிரான்ஹாமே'' என்றனர் (மரித்துப் போன ஒரு சிறு குழந்தை உயிரோடெழுப்பப்பட்டது. இன்னும் வேறு சில அற்புதங்களும் நடந்தன.) முப்பதாயிரம் கத்தோலிக்கர்கள்... இல்லை உங்கள் மன்னிப்பை கோருகிறேன், அது இருபதாயிரம் (ஆப்பிரிக்காவில் தான் முப்பதாயிரம் பேர்). மெக்ஸிகோ நகரத்தில் நின்று கொண்டிருந்த போது அந்த அற்புதம் நிகழ்ந்தது. அது நிகழ்ந்த போது, ஒரே நேரத்தில் இருப்தாயிரம் கத்தோலிக்கர்கள் இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அங்கே நின்று கொண்டிருந்த அந்த குருவானவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ''திரு. பிரான்ஹாம் அவர்களே, எங்கள் பரிசுத்தவான்கள் நீங்கள் செய்பவைகளை செய்ய முடியும்

என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டனர்.

நான், அவர்களுடைய உபதேசங்களை அறிந்தவனாய், நிச்சயமாக. ''அவர்கள் உயிரோடிருந்தால்'' என்றேன். மரித்த பின்புதான் கத்தோலிக்க பரிசுத்தவானாக இருக்க முடியும், பாருங்கள்? உங்களுக்குத் தெரியும்.

எனவே அந்த நிருபர், "ஓ, மரிக்காவிட்டால் பரிசுத்தவானாக முடியாதே" என்றார்.

நான், "அப்படி எங்கு படித்தீர்களா? பவுல், "தேவனால் அழைக்கப்பட்ட எபேசுவிலுள்ள பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது என்று கூறியிருக்கிறான். அவன் இப்படியாக கலாத்தியா, ரோமாபுரி போன்ற மற்ற இடங்களிலுள்ளவர்களுக்கும் நிருபங்கள் எழுதி அனுப்புகிறான். பரிசுத்தவான்கள் -

பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். அதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

97. அவர்களோ, “நாங்கள் வேதத்தைக் குறித்து வாக்குவாதம் செய்யக்கூடாது. ஏனெனில் நாங்கள் சபை. சபை சொல்வதை தான்... வேதம் என்ன கூறினாலும் எங்களுக்கு கவலையில்லை. சபை என்ன கூறுகிறதோ அதுதான் முக்கியம்'' என்று கூறிவிட்டு, ”கத்தோலிக்க சபையைக் குறித்த உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று கேட்டார்கள்.

நான், ''அந்த கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்காமலிருந்தால் நலமாயிருக்கும். ஆனால் நீங்கள் கேட்டதனால் உண்மையைக் கூறப் போகிறேன்'' என்றேன்.

அவர்கள், ''நாங்கள் உண்மையைக் கூற விரும்புகிறோம்'' என்றனர்.

நான், “எனக்குத் தெரிந்தவரையில், அது இறந்தவர்களின் ஆவியுடன் தொடர்பு கொள்ளுதலின் உச்ச நிலை” என்றேன்.

அவர்கள், ''ஏன் அப்படி கூறுகிறீர்கள்?'' என்றார்கள்.

நான், ''மரித்தோரிடம் பேசும் எவனும் அவர்களுடைய ஆவியுடன் தொடர்கொள்ளும் ஒருவனாக இருக்கிறான்.

அந்த பரிசுத்தவானுக்கு மறு உத்தரவு அருள் முடியுமானால், அவர் நரகத்தில் இருக்கிறார் என்றாகிவிடுகிறது. ஏனெனில் அங்கு கடந்து சென்றவர்கள் திரும்பி வர முடியாதென்று என் வேதம் உரைக்கிறது. அது உண்மை. எனவே அது பரிசுத்தவான் அல்ல. பிசாசு அந்த பரிசுத்தவானைப் போல் பேசுகிறான்“ என்றேன்.

அவர் ஒரு நிமிடம் பொறுங்கள். நீங்களும் கூட மரித்தோருடன் பேசுகின்றீர்கள்'' என்றார்.

நான், “எப்பொழுது?'' என்று கேட்டேன்.

அவர், “இயேசு மரித்தார்'' என்றார்.

நான், ''ஆனால் அவர் உயிரோடெழுந்தார். அவர் மரித்த நிலையில் இல்லை. அவர் உயிரோடிருந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியஸ்தர் அவர் ஒருவரே'' என்றேன்.

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குரிய திறவுகோல்களை
உடையவராயிருக்கிறேன்.
விருப்பமுள்ளவன் வந்து ஜீவத்தண்ணீரை

இலவசமாய் பருகக்கடவன். என்னே, அவர் தான் நம்முடைய தேவன் நம்முடைய தேவன்!

## 58-09-28E சர்ப்பத்தின் வித்து

---------------

83. உங்களுக்குத் தெரியுமா, அந்த வாலிப கத்தோலிக்கப் பெண்களை எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் இந்த சிறு... (உங்களில் வயதானவர் சிலருக்கு என்னுடைய வயது இருக்கும்)... அவர்கள் முழங்கால் உயரம் உள்ள இடத்திற்கு சென்றனர். அந்த ஆள் இன்றிரவு நரகத்தில் இருப்பார் என்று நினைக்கிறேன். எனக்குத் தெரியாது, நான் அவருடைய நியாயாதிபதி அல்ல. ஆனால் அவர் அந்த முதல் அசுத்தமான பாடலை அமைத்து அதை வானொலியில் ஒலிபரப்பு செய்தார். அவர்கள் அதை தணிக்கை செய்யவேயில்லை. அந்த பாடல், "சுருட்டி

விடுங்கள், பெண்களே, சுருட்டி விடுங்கள்; சுருட்டி விட்டு உங்கள் அழகான முழங்கால்களைக் காண்பியுங்கள்'' என்பதே. அதுதான் அங்குதான் முதல் குட்டைக்கால் சட்டை வந்தது. அது உண்மை. அவர்கள் இந்த ஆசாமியை டெக்ஸாஸிலிருந்து கொண்டுவந்து, இந்த ஸ்திரீகளை அவரிடம் கொண்டு சென்று அவர்கள் உள்ளில் அணிந்த ஆடைகளை உபயோகித்து, அவர்கள் பார்வைக்கு காணப்படாத ஒன்றைப் போல் காணும்படி செய்து, அவர்கள் அவ்விதம் இருக்க விட்டுவிட்டனர். இப்பொழுது அவர்கள் என்ன செய்கின்றனர்? அது உள்ளே நுழைந்துவிட்டது. அது ஒரு ஆவி.

84. அன்றொரு நாள் ஒரு மனிதன் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். அவர், ''நான் என்ன செய்யப்போகிறேன் என்று தெரியவில்லை. என் பையன் மிகவும்

நல்லவனாயிருந்தான். ஆனால் இப்பொழுதோ அவன் கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்துக் கொண்டுவிடுகிறான்“ என்றார்.

''ஏன்?'' என்றேன்.

''அவன் ஒரு திருடனுடன் தொடர்பு கொண்டிருக்கிறான்'' என்றார்.

நீங்கள் ஒரு திருடனும் தொடர்பு கொண்டிருந்தால், நீங்களும் திருடனாகிவிடுவீர்கள். என் வயோதிப கென்டக்கி தாய் இவ்வாறு கூறுவது வழக்கம். “நீங்கள் உண்ணி பிடித்த நாயுடன் படுத்துக் கொண்டால், உங்களுக்கும் உண்ணி பிடிக்கும்'' என்று. கெட்ட நடத்தையுள்ள ஒரு பெண்ணைக் கொண்டுபோய் ஒழுக்கமுள்ள ஒரு பையனுடன் வைத்துவிட்டால், முதலாவதாக என்ன தெரியுமா, அவனும் கெட்டுப்போய் விடுவான். அதே

போல்தான் கெட்டநடத்தையுள்ள ஒரு பையனை ஒழுக்கமுள்ள ஒரு பெண்ணுடன் வைத்துவிட்டாலும். உங்களுக்கு இருக்கும் கூட்டாளிகள் மூலம் நீங்கள் யாரென்று அறியப்படுகிறீர்கள். நீங்கள் பிரிந்து வாருங்கள். ''அவர்களை விட்டுப் பிரிந்து வெளியே வாருங்கள்,'' என்று வேதம் உரைக்கிறது. அது உண்மை.

## 58-09-27 நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல?

--------------

77 இந்தக் காலையில் இங்கு அமர்ந்துள்ள புருஷர்களும் ஸ்திரீகளும் உங்களுடைய இறுதியான தெரிந்து கொள்ளுதலைச் செய்யலாம். பல ஆண்டுகளுக்கு முன்னர் நீங்கள் இப்பொழுது என்னவாயிருக்க வேண்டும் என்று தேர்ந்தெடுத்த காரணத்தால், நீங்கள் இன்றைக்கு என்னவாயிருக்க வேண்டுமோ அவ்வாறிருக்கிறீர்கள். நீங்கள்

இப்பொழுது தெரிந்து கொள்வதோ, இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து ஆண்டுகளில் என்னவாயிருப்பீர்கள் என்பதை தீர்மானிப்பதாயுள்ளது. இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து வருடங்களில் நீங்கள் ஒரு மிஷனரியாக இருக்கலாம். இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து வருடங்களில் நீங்கள் ஒரு புகழ்வாய்ந்த கிறிஸ்தவராயிருக்கலாம்.

78 இல்லையென்றால் நீங்கள் தவறான தீர்மானம் செய்த காரணத்தால், இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து வருடங்களில் நீங்கள் நரகத்தில் இருக்கலாம். இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து வருடங்களில் ஒரு மதுபானம் அருந்தும் இடத்தில் உள்ள எச்சிற்படிகங்களை நீங்கள் சுத்தம் செய்து கொண்டிருக்கலாம். இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து

ஆண்டுகளில் நீங்கள் வீதியில் ஒரு விபச்சாரியாக இருக்கலாம்.

79 இல்லையென்றால் கிறிஸ்துவுக்கான உங்களுடைய தெரிந்து கொள்ளுதலின் நிமித்தமாக நீங்கள் எந்த சமுதாயத்திலாவது ஒரு புகழ்வாய்ந்த ஒரு புருஷனாகவோ அல்லது ஒரு ஸ்திரீயாகவோ இருக்கலாம். நீங்கள் இன்றைக்கு செய்துள்ள உங்களுடைய தெரிந்து கொள்ளுதலின் நிமித்தமாக இன்றைய தினத்திலிருந்து இன்னும் ஐந்து வருடங்களில் நீங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் சென்று மகிமையில் இருக்கலாம்.

80 ஆனால் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் காண்கிறதை நோக்கிப் பார்க்காதீர்கள். நீங்கள் விசுவாசித்தினால் காண்கிறதை தெரிந்து கொள்ளுங்கள். விசுவாசத்தினால் நீங்கள் தெரிந்து

கொள்ளுகிற காரியம் மாத்திரமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதாய் உள்ளது.

**58-07-20M விசுவாசத்தினாலே மோசே**

----------------

133 நான் ஜெபிப்பதற்கு முன்பாக நீங்கள் ஜெபத்தில் நினைவு கூரப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களா? உங்களுடைய தேவையைக் குறித்த ஏதாவது வேண்டுகோள் இருக்குமாயின், உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அவர் உங்களுடைய எல்லா கரங்களையும் காண்கிறார்.

134 நீங்கள் ஒரு பாவியாயிருந்தால், உங்களுடைய கண்களை ஏறெடுத்து இப்பொழுதேப் பாருங்கள். நீங்கள் அலட்சியமுள்ளவர்களாயிருந்து வந்திருந்தால், நீங்கள் சிறு

சச்சரவுகளையும் மற்றும் சிறு காரியங்களையும் உடையவராயிருந்து வந்திருந்தால், அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது? நீங்கள் இந்நாட்களில் ஒன்றில் மரிக்கப் போகிறீர்கள். எந்த நாளில்? ஒருக்கால் இன்றைக்காயிருக்கலாமே! உங்களுக்குத் தெரியாது. இப்பொழுதிலிருந்து இன்னும் ஒரு மணி நேரத்தில் நீங்கள் நரகத்தில் இருக்கலாம், அல்லது நீங்கள் பரலோகத்தில் இருக்கலாம். ஆனால் நீங்கள் இப்பொழுதே தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய ஜீவியத்தில் சரியில்லாத காரியம் ஏதாவது இருக்குமாயின், நீங்கள் விசுவாசத்தினாலே இப்பொழுதே தெரிந்து கொள்ளுங்கள்.

135 நீங்கள், “பாருங்கள், என்னால் அவள் செய்ததை பொறுத்துக் கொள்ள முடியவில்லையே! என்னால் அவன்

செய்ததையும் கூட பொருத்துக் கொள்ள முடியவில்லையே!” என்று கூறலாம். அவர்கள் என்ன செய்திருந்தாலும் பொருட்படுத்தாமல் ஜீவனை தெரிந்து கொள்ளுங்கள். ஜீவனை தெரிந்து கொள்ளுங்கள்.

136 இயேசு, “நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து ஒவ்வொரு நபரின் தப்பிதங்களையும் அவர்களுக்கு மன்னிக்கவில்லையென்றால், அப்பொழுது உங்களுடைய பரலோகப் பிதா உங்களை மன்னிக்கமாட்டார்," என்றார். எனவே அதை கவனமாக புரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய இருதயத்தில் எந்த நபருக்கு எதிராக, பாவிக்கெதிராகவோ அல்லது ஒரு பரிசுத்தவானுக்கெதிராகவோ ஒரு குற்ற உணர்வு கொண்டிருந்தால், நீங்கள் நரக அக்கினியின் அபாயத்தில் இருக்கிறீர்கள்.

137 இப்பொழுது உங்களுடைய கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். நீங்கள் உங்களுடைய சத்துருவைக் காண்கிறீர்களா? அல்லது நீங்கள் உங்களுடைய இரட்சகரைக் காண்கிறீர்களா? நீங்கள் இந்தக் காலையில் யாரை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**58-07-20M விசுவாசத்தினாலே மோசே**

------------------

27. ஓ, இழக்கப்பட்டவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய ஆக்கினைத் தீர்ப்பை முத்திரையிட்டப் பிறகும், அவர்கள் தங்களுடையக் கடைசி பிரசங்கத்தைக் கேட்டப் பிறகும், ஒரு பிசாசினுடைய நரகத்தில் இருக்கப்போவது, இழக்கப்பட்டு, மனந்திரும்ப வாய்ப்பேயில்லாமல் இருக்கப்போவதும், அவர்கள்

புறக்கணித்திருக்கிற சந்தர்ப்பங்களை நினைவுகூருவதும் என்ன ஒரு விசனமுள்ள காரியமாய் இருக்கிறது.

28. நீங்க ளோ என் னிடத்தில், அப்படியானால், "பிரசங்கியாரே, பாதாளத்தில் நினைவுகூருதல் உண்டா?" என்று கேட்கலாம். இயேசுவே உண்டு என்று கூறினார். அவர் ஐசுவரியவான் தன் கண்களை பாதாளத்திலே ஏறெடுத்துப் பார்த்தபோது, அவன் ஆபிரகாமையும், அவருடைய மடியில் லாசருவையும் கண்டான் என்று அவர் கூறினார். "அப்பொழுது அவர், "உன்னுடைய ஜீவியகாலத்தை... நினைத்துப் பார்" என்றார் ஒரு நினைவுகூருதல் உண்டு.

29. இழக்கப்பட்டவர்கள் அறிந்துகொள்ளும்படி பெரிய கூட்டங்களில் அமர்ந்திருந்ததும், தேவனுடைய அபிஷேகிக்கப்பட்ட

ஊழியர்களின் வல்லமையான பிரசங்கங்களை கேட்டிருந்ததும், அது மட்டுமின்றி, தேவன் ஜனங்களுக்கு நிகழ்த்தியிருந்த அபிஷேகிக்கப்பட்ட அடையாளங்களையும், அதிசயங்களையும் காணும்படியிருந்ததும், அதன் பின்னர் இந்த எல்லா எச்சரிப்புக்களையும் நினைவுகூர்ந்து, அதே சமயத்தில் இழக்கப்பட்டிருப்பது எப்படிப்பட்ட ஓர் அச்சந்தருகிறக் காரியமாய் இருக்கும். ஏன், அது அவர்களை என்றென்றைக்குமாய் நினைவூட்டி அலைக்கழிக்கும்.

30. இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, "அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார், அந்த ஆவிகள் தேவன் நோவாவின் நாட்களில் நீடியப் பொறுமையோடே காத்திருந்தபோது, மனந்திரும்பாமற்போனவைகள் “என்று

வேதம் நமக்குச் சொல்லுகிறது. ஒரு மேசியா வரப்போவதாயிருந்தார் என்று சாட்சி பகர்ந்த நோவா, ஏனோக்கு மற்றும் அவர்களுடைய நாட்களின் மகத்தான தீர்க்கதரிசிகளை அவர்களுடைய நினைவுகூருதலுக்கு கொண்டு வரும்படிக்குச் சென்றார். அவர்கள் அந்தச் செய்தியைப் புறக்கணித்துவிட்டிருந்தனர்.

31. இழக்கப்பட்ட என்னுடைய நண்பனே உனக்காக நினைவு கூரும்படியான அந்த நாளில் அது ஒரு பயங்கரமான காரியமாய் இருக்கும். நீ இங்கே மரிக்கும்போது, உன்னுடைய கிரியைகள் உன்னைப் பின் தொடரும். அவைகள் ஒன்று நித்தியத்தினூடாக உன்னை விட்டு ஓயாமல் நினைவுகளில் அலைக்கழிக்கும் அல்லது நித்தியத்தினூடாக உன்னை ஆசீர்வதிக்கும்.

32. ஆனால் நினை விருக்கட்டும், இரட்சிக்கப் பட்டிருக்கிறவர்களுக்கோ அது என்ன ஒரு மகத்தான காரியமாய், ஒரு சந்தோஷமாய், உண்மைகளைச் சந்திக்கும்படி நினைவிற்குக் கொண்டு வரக்கூடியதாயும், இன்றிரவு இந்தக் கட்டிடத்தில் இருக்கிற தூதர்களையும், மகத்தான கூட்டங்களையும், மகத்தான நேரங்களையும், நாம் ஒருமித்து அனுபவித்திருந்த மகத்தான சந்தோஷத்தின் நினைவுகூறுதலுமாய் இருக்க வேண்டும். அது இரட்சிக்கப்பட்ட மற்றும் இரட்சிக்கப்படாத இரு குழுவினருக்குமே முன்னால் உள்ள என்ன ஒரு நேரமாய் இருக்க வேண்டும்!

33. தேவன் ஒரு நல்ல தேவனாயிருக்கிறார். அவர் மிகவும் நீடியப் பொறுமையுள்ளவராயிருக்கிறாரே! அவர் மிகுந்த தயவு, சாந்தம், பொறுமை நிறைந்தவராயிருக்கிறாரே! "அவர்

ஒருவரும் கெட்டுப்போகாமலிருக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.'' அவர் மனுஷரை அழிந்துபோவதிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்ள செய்யப்படக்கூடிய ஒவ்வொரு காரியத்தையும் செய்திருக்கிறார். ஆயினும் அவர்கள் எப்படியாயினும் அழிந்து போவார்கள், ஏனென்றால் அவர்கள் விசுவாசிக்கிறதில்லை.

## 58-04-06E உயிர்த்தெழுதலின் சாட்சியம்

--------------

318 நீங்கள் பாவம் என்ற வார்த்தையை எடுத்துக்கொண்டு, அதன் பொருள் என்னவென்பதைக் கண்டறியுங்கள். பாவம் என்ற வார்த்தை "அவிசுவாசம்" என்பதையேப் பொருட்படுத்துகிறது. இரண்டு பிரிவுகள் மாத்திரமே உள்ளன, அது ஒரு விசுவாசி அல்லது அவிசுவாசி என்பதாய் உள்ளது.

அது ஒரு நீதிமானாக்கப்பட்ட நபர் அல்லது ஒரு பாவி என்பதாய் உள்ளது. அவ்வளவுதான். நீங்கள் ஒரு அவிசுவாசியாயிருந்தால், நீங்கள் ஒரு பாவியாயிருக்கிறீர்கள்; நீங்கள் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும், நீங்கள் எவ்வளவுதான் சபைக்குச் சென்றாலும், அல்லது நீங்கள் ஒரு பிரசங்கியாயிருந்தாலும் கூட அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் இன்னமும் ஒரு அவிசுவாசியாயிருக்கிறீர்கள்.

319 அந்த பரிசேயர்கள் பிரசங்கிமார்களாயிருந்தனர், அவர்கள் அவிசுவாசிகளாயிருந்தனர், இன்றைக்கு அதற்காக அவர்கள் நரகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் முடிந்தளவு அவ்வளவு மத ஈடுபாடு கொண்டும், அவ்வளவு பக்தியுள்ளவர்களாயுமிருந்தனர், ஆனால் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.

அவர்கள் அவரை, "ஒரு பிசாசு" என்று அழைத்து, அவருடைய வார்த்தையை விவாதித்தனர். அவர்களில் சிலர், "நீர் இப்பொழுதே சிலுவையிலிருந்து இறங்கி வாரும். ஒரு அற்புதத்தை நிகழ்த்தும். நீர் அதைச் செய்ய நாங்கள் காண்போமாக" என்றனர். ஒருவன் அவரை ஒரு கோலினால் அவருடைய தலையின்மேல் அடித்து, "உம்மை அடித்தது யார் என்று எங்களுக்கு தீர்க்கதரிசனம் சொல்லும், அப்பொழுது நீர் ஒரு தீர்க்கதரிசி என்று நாங்கள் உம்மை விசுவாசிப்போம்" என்றான். பாருங்கள், அவிசுவாசிகள்! அவர்கள் விசுவாசிகளாயிருந்தனர் என்று அவர்கள் பாவனை செய்தனர், ஆனால் அவர்கள் பரிசுத்தமும், பக்தியுள்ளவர்களாயிருந்தபோதிலும், அவர்கள் அவிசுவாசிகளாய், உயிர்ப்பிக்கப்படாதவர்களாய், பிரிக்கப்பட்டவர்களாயிருந்தனர்.

## 57-09-22E எபிரெயர், ஏழாம் அதிகாரம் #2

---------------

255 ஆகையால் கவனியுங்கள். ஒரே ஒரு நித்திய ஜீவனின் ரூபம் மாத்திரமே உண்டு. அதைக் கண்டறியுங்கள். அது தேவன் மாத்திரமே நித்திய ஜீவனை உடையவராயிருக்கிறார் என்பதாகும். வேதம் அவ்வண்ணமாய்க் கூறியுள்ளது. தேவன் மாத்திரமே நித்திய ஜீவனை உடையவராயிருக்கிறார். ஒரு மனிதன் நரகத்தில் என்றென்றுமாய் வேதனையுறப் போவதாயிருந்தால், அப்பொழுது அவன் தேவனை, நித்தியத்தை உடையவனாயிருக்க வேண்டும். ஆனால் நான். அங்கு அதை கூறுவதோ...

256 இப்பொழுது, எரிகின்ற நரகம் ஒன்று இல்லையென்று நான் கூறிக்கொண்டிருக்கவில்லை என்பது நினைவிருக்கட்டும். அக்கினியும்

கந்தகமும் கொண்டு எரிகிற ஒரு நரகம் உண்டு. "அங்கே புழு... அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்." அக்கினியினாலும் கந்தகத்தினாலுமான ஒரு தண்டனை. அது ஒரு கால் கோடிக்கணக்கான ஆண்டுகள் நீடித்திருக்கலாம். ஆனால் அதற்கு ஒரு முடிவு உண்டு, ஏனென்றால் நரகம் பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது. ஒவ்வொரு காரியமும் அதே தேவனிடத்தில் தான் ஆதியில் இருந்தது, ஒவ்வொரு காரியமும் தேவனிடத்திலிருந்துதான் வந்தது. அதே ஆவி...

257 அன்பின் ஆவியை எடுத்துக்கொண்டால், அது சுத்தமான, கலப்படமற்ற தேவனுடைய மகத்தான ஊற்றாயிருந்தது. அதிலிருந்து ஒரு தாறுமாறாக்கப்பட்ட அன்பு உண்டானது.

அதன்பின்னர் அது மானிட அன்பிற்குள்ளாக வந்தது. அதன்பின்னர் அது பாலியல் அன்புக்குள்ளாக வந்தது. அதன்பின்னர் அது மற்ற அன்புகளுக்குள்ளாக, அன்புகளுக்குள்ளாக, அன்புகளுக்குள்ளாக வந்து, அப்படியே தொடர்ந்து அது அசுத்தத்திற்குள்ளாக மாறுகிறவரையில் தாறுமாறாகிக்கொண்டே போகிறது. ஆனால் அந்த எல்லாக் காரியங்களுக்கும் ஒரு துவக்கம் இருந்தது. என்றோ ஒரு நாள் அது நேராக திரும்பவும் மூல அன்பிற்குள்ளாகத் திரும்பும்; அது நித்தியமானது, அங்கு இச்சை, மானிட அன்பு, உணர்ச்சிகரமான அன்பு, அந்த எல்லா அன்புகளுமே ஓய்ந்து போய்விடும்.

258 இந்த எல்லா பாவனை விசுவாச நம்பிக்கைகளும் ஓய்ந்து போய்விடும். ஒரே ஒரு உண்மையான விசுவாசம் தான்

உண்டு. மற்ற யாவும் ஒய்ந்து போய்விடும். அவைகள் இந்த உண்மையான ஊற்றிலிருந்து தாறுமாறாக்கப்பட்டவைகளாயிருந்தன.

259 ஆகையால் நரகம், வேதனை, வேதனையோ நித்தியமானதல்ல. பாவத்தின் காரணமாகவே வேதனை கொண்டு வரப்பட்டது, பாவமே வேதனையை அறிமுகப்படுத்தியது. பாவமானது முடிவுறுகின்றபோது, வேதனையும் கூட முடிவுற்றுவிடும். கிறிஸ்துவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத பாவிகளுக்கு அங்கே நரகத்தில் ஒரு நேரம் உண்டாயிருக்கும், அவர்கள் ஒரு கால் கோடா கோடி ஆண்டுகள் தண்டிக்கப்படலாம். ஒரு கால் அது கோடா கோடி ஆண்டுகளாயிருக்கலாம், ஆனால் எனக்குத் தெரியாது. என்னால் அதைக் கூற முடியாது. ஆனால் ஏதோ ஒரு நேரத்தில்

அதற்கு ஒரு முடிவு உண்டாகும், ஏனென்றால் அது நித்தியமானதல்ல.

## 57-09-08E எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2

---------------

227 ஒரு மனிதன் ஏமாற்றிக் கொண்டும், திருடிக்கொண்டும், பொய் யுரைத்துக் கொண்டுமிருப்பதை நீங்கள் காண்பீர்களேயானால், நினைவிருக்கட்டும், அவனுடைய பங்கு நரகத்தில் அவனுக்காக காத்துக்கொண்டிருக்கிறது, தேவனுக்கு முன்பாகவும், பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் அவனுடைய இடத்தில் அங்கே வாதிக்கப்படுவான். அவன் அங்கே வாதிக்கப்படுவான். என்றென்றைக்குமாய் அல்ல, அவன் என்றென்றைக்குமாய் வாதிக்கப்பட முடியாது, என்றென்றுமாய் என்று ஆங்கிலத்தில் உள்ள வார்த்தை எல்லா

நேரத்திலும் என்று பொருள்படவில்லை. நித்தியம் என்பதுதான் என்றென்றைக்குமே என்பதாய் உள்ளது. நித்தியம் என்பதற்கு... துவக்கமோ அல்லது முடிவோ கிடையாது. ஆனால் என்றென்றைக்கும் என்பது "ஒரு குறிப்பிட்ட காலம்" என்பதாய் உள்ளது. வேதம், "சதாகாலங்கள் என்பதற்கான ஆங்கில வார்த்தையில் என்றென்றும் என்ற வார்த்தைக்குப் பின்னர் ஆங்கில இடைச்சொல்லிட்டு பின்னர் என்றென்றும்" என்று கூறப்பட்டுள்ளது. யோனா மீனின் வயிற்றில் "என்றென்றைக்குமாய் இருந்தான் என்று வேதம் உரைத்துள்ளது. அது ஒரு குறிப்பிட்ட கால நேரமாயுள்ளது.

228 ஆனால், பாருங்கள், ஒரே ஒரு நித்திய ஜீவன் மாத்திரமே உண்டு, அது தேவனாயுள்ளது. எனவே நீங்கள் என்றென்றைக்குமாய் வாதிக்கப்படப் போவதாயிருந்தால், நீங்கள் ஒருபோதும்

மரிக்க முடியாது, அப்பொழுது நீங்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் என்றென்றைக்குமாய் வாதிக்கப்பட முடியாது... நீங்கள் தேவனுக்கு முன்பாகவும், பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் கோடிக்கணக்கான ஆண்டுகள் வாதிக்கப்படலாம். அது எவ்வளவு காலம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அது முடிவிலே ஒரு முடிவிற்கு வந்தாக வேண்டும், ஏனென்றால் அது ஒரு துவக்கத்தை உடையதாயிருந்தது. "தேவன் மாத்திரமே நித்திய ஜீவனை உடையவராயிருக்கிறார். என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் குறிப்பிட்ட காலம் ஜீவனையுடையவனாயிருப்பான் என்பதல்ல. அந்த துவங்குகிற ஜீவன்,

அதற்கு இங்கு ஒன்றுமேயில்லை. ஆனால் அங்கு நித்திய ஜீவன், ஸோயீ, தேவனுடைய சொந்த ஜீவன் இறங்கி வந்து, மனிதனுக்குள் வாசம் செய்கிறது, அவன் தேவனோடு நித்தியமாயிருக்கிறபடியால், மரிக்க முடியாது. அதைத்தான் வார்த்தைக் கூறினது.

229 அதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். அப்படியானால் இரண்டு நித்திய ஜீவங்கள் உண்டா? உங்களால் அதற்கு பதிலளிக்க முடியாது, உங்களால் முடியுமா? ஒரு நித்திய ஜீவன் தான் உண்டு, அது தேவனுடைய ஜீவனாகும். இது மற்றொரு விதமான ஜீவன், அது என்னவாயிருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை, அதற்கு ஒரு முடிவு உண்டாகும். துவக்கத்தைக் கொண்டுள்ள எந்த ஒரு காரியத்திற்கும் முடிவு உண்டு.

ஆனால் துவக்கத்தைக் கொண்டிராத எந்த ஒரு காரியத்திற்கும் முடிவே கிடையாது. துவக்கமேயில்லாத நித்திய ஜீவனை தேவன் நமக்கு அளிப்பதாகக் கூறினார். உண்மையாகவே நமக்குள்ளாக இருக்கிற ஜீவன் மானிட சுபாவத்தினால் இங்கே கொண்டுவரப்படவில்லை. ஜென்ம சுபாவம் நம்க்கு ஒரு ஆவியை அளித்தது, ஆனால் அந்த ஆவி மரித்துப் போனது, நாமோ தேவனுடைய ஆவியைப் பெற்றுள்ளோம். தேவனுக்கே மகிமை!

**57-09-01E எபிரெயர், நான்காம் அதிகாரம்**

-------------

78. இப்பொழுது இங்கேயிருக்கின்ற இந்த ஜனங்கள்... நாம் மரிக்கையில், நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்போமானால், மறுகரையில் நிச்சயமாக கிறிஸ்து இயேசுவாகிய அந்த மகத்தான சரீரத்துடன் இருக்கத்தக்கதாக

நாம் செல்வோம். நாம் பாவிகளாக இருப்போமானால், அவிசுவாசிகள் என்னும் பெரிய சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்; நம்முடைய பங்கு அங்கே நரகத்தில் மாய்மாலக்காரர்கள் இன்னும் மற்றவர்களுடன் இருக்கும் என்றும் தேவன் கூறியுள்ளார். ஆமென்! ஒருக்கால் சரியாக தெளிவாக இல்லாமலிருக்கலாம்.

**54-01-03E கேள்விகளும் பதில்களும் COD #3**

# நரகம்

# 3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து